Postage to Ceylon & India 50
do Straits 75

Half col Rs 3
per Column 5

Hindu Organ

VOL 6. ௬-ம் புத்தகம் | JAFFNA, WEDNESDAY AUGUST 22, 1894 | இந்துசாதனம். | கலியுகஸு௯௯௫ ... | NO 1. இலக்கம் ௧.

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன் கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

WARD AND DAVY

JUST IMPORTED.

DRESS STUFFS—

Pep: Drill. Fancy prints, Belgium Checked Coatings of best quality, Long cloths of best texture, Cambrics, Mulls of 3 & 3½ breadth, Best Handkerchiefs, Children's Socks & Stockings, Gents Socks, Lakay cloth, Grey shirtings, Ready made shirts, Kaki Drill coats &c

FANCY GOODS—

Best American Riverside Timepieces, Mirrors Binocular glasses. Bracket chains, Pearl strings, Spectacles of Real pebbles, Wool thread, Colgates soaps, &c. &c.

SUNDRIES:—

Canvas oil cloths, Milk tins, Candles, Buckets &c

STATIONERY—

Fooleeaps, Note papers, Fancy pen-holders. Faber's pencils &c.

PATENT MEDICINES:—

Mother Seigels syrups, Fellows syrups, Codliver oil with malt, Mellins food, Pepsine wine, Scotts emulsion DeJonghs cod oil, Alofas cholera powder, Ferris' gleet and Gonorhoea cure &c.

Ward and Davy
15/8/94 Navelar Premises
Jaffna.

☞ For sale ENGLISH-TAMIL DICTIONARY (Revised Edition) Price Re 1/75 each.
Applp to the Publisher H. O.

I. V. Ramupillai of Mallakam, Jaffna, now residing at Taiping, Straits Settlements, do hereby revoke the power of Attorney granted by me in favour of my brother V. Sangarapillai of Mallakam. All transactions hereafter carried on by the said V. Sangarapillai on my behalf and by virtue of the said power of Attorney will not be binding on me.

Taiping
11th July 1894. V. Ramupillai.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary Jurisdiction } No 617.
Class I.

In the Matter of the Estate of the late Vinayagar Arumugam of Neervaly
Deceased.

Arumugam Vaitialinga asary of Neervaly
Petitioner.

Vs

1. Thaivanai widow of Arumugam of Neervaly
2. Arumugam Kanagasapapathy asary of do
3. Ponnammа widow of Ramoo of do
4. Sinnamma wife of Ramoo Arumugam of do &
5. Thangamma wife of Ramoo Sinnatamby of do

Respondents.

This matter of the Petition of Arumugam Vaitialinga asary of Neervaly praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Vinayagar Arumugam coming on for disposal before F. J. de. Livera Esquire, District Judge, on the 3rd day of August 1894 in the presence of Messrs Casippillai and Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 3rd day of August 1894 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 2nd day of August 1894 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 3rd day of August 1894.
F, J de, Livera.
District Judge.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary Jurisdiction } No. 618.
Class I.

In the Matter of the Estate of the late Suppiramanier Muttiah of Urumpirai
Deceased

Suppiramanier Chinniah of Vannarponne
Petitioner

Vs.

1. Kanthar Ponnampalam and his wife
2. Sivakamippillai of Urumpirai

Respondents.

This matter of the Petition of Suppiramanier Chinniah of Vannarponne praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Suppiramanier Muttiah coming on for disposal before F. J. de. Livera Esquire, District Judge, on the 3rd day of August 1894 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 3rd day of August 1894 having been read, it is declared that the Petitioner is the sole heir of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 27th day of August 1894 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 7th day of August 1894.
F. J de. Livera,
District Judge.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction } No. 619.
Class I.

in the Matter of the Estate of the late Kathirkamer Murugar of Erlalai
Deceased

Murugar Kanthar of Erlalai
Petitioner

Vs.

1. Pavilattai widow of Murugar of Erlalai &
2. Murugar Changary of do

Respondents.

This matter of the Petition of Murugar Kanthar of Erlalai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kathirkamer Murugar coming on for disposal before F. J. de. Livera Esquire, District Judge, on the 7th day of August 1894 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 7th day of August 1894 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 27th day of August 1894 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 8th day of August 1894
F. J. de Livera,
District Judge.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary Jurisdiction } No. 620
Class I.

In the matter of the Estate of the late Kanthaccuddiar Velupillai of Valvedditurai
Deceased.

Sivakamippillai widow of Velupillai of Valvedditurai
Petitioner.

Vs.

1. Kantakkuddiar Ponnampalam and
2. Kantakkuddiar Kathirippillai both of Valvedditurai

Respondents.

This matter of the Petition of Sivakamippillai widow of Veluppillai of Vavedditurai praying for letters of Administration to the estate of the abovenamed deceased Kantakkuddiar Veluppillai coming on for disposal before F. J. de Livera Esquire, District Judge, on the 14th day of August 1894 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 14th day of August 1894 having been read, it is declared that the Petitioner is the widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the Respondent or any other person shall on or, before the 10th day of September 1894 show sufficient cause to the satisfaction of this Court to the contrary

Signed this 14th day of August 1894.
F. J. de Livera.
District Judge.

THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY AUGUST 22, 1894.

RETRENCHMENT OF PUBLIC EXPENDITURE.

Retrenchment has become the question of the hour. The Government having decided to grant compensation to public servants for fall in exchange, involving an annual outlay of Rs 500,000, and the continued depreciation of silver threatening to cause further loss in meeting the gold liabilities of this Government, it has become necessary that, in order to make both ends meet, either reductions should be made in the cost of establishments, or recourse should be had to increased taxation. The latter alternative is out of the question, since it is not proposed to meet the deficit by this means, and as such a measure would be highly unpopular among, and strenuously opposed by, all sections of the community. It is, therefore, by retrenchment, and by retrenchment alone, that the equilibrium between revenue and expenditure should be preserved. It would, however, prove highly detrimental to the public interests, if retrenchment will mean the suspension of much-needed public works, curtailment of expenditure on education and sanitation of the country, and the abolition of offices which would affect the efficiency and usefulness of public departments. The select Committee on Retrenchment, therefore, have a very difficult and responsible task before them. While striving to cut down all unnecessary public expenditure, they have also to be careful to safeguard the interests of the public, which should not be allowed to suffer by the granting of exchange compensation to the officers of Government, however richly they may deserve it.

உ
கணபதி துணை.

வாழ்கவந்தணர்வானவராவினம்...... ......*
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக ... ...*
ஆழ்கதீயதெல்லாமரனாமமே...... ....*
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.... ....*

விளம்பரம்

இதன்கீழ்க்கைநொப்பம் வைக்கும் V. இராமுப்பிள்ளையாகிய நான், என்னுடைய சகோதரன் மல்லாகம்குடி V. சங்கரப்பிள்ளைக்கு எழுதிக்கொடுத்த தத்துவ உறுதியை இதனால் அழித்து, இனி ஷெயார் எனக்குவரவேண்டிய பணத்துக்குக் கொடுக்கும் பற்றுச்சீட்டுமுதலிய எந்த எழுத்தும் பெலப்பற்றதாயிருக்குமென்று இதனால் வெளிப்படுத்துகிறேன்.

தைப்பிங் 1894 ஜூலைமீ 11௳ } இப்படிக்கு V. இராமுப்பிள்ளை.

இத்தால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில் இதன்கீழ்காட்டப்பட்ட இலக்க உறுதிகளிற் சொல்லப்பட்ட எனது ஆட்சியான காணிகளை அறுதியாய் விற்கப்போகிறபடியால் பிரியமானபேர்கள் கீழ்க்கைநொப்பம்வைத்திருப்பவரிடம் கேட்டறிந்து கொள்ளலாம்.

3692-ம் இலக்கத்தில் உடுவிலிறை வாரிகிராணும் மறுபேரிற்தோம்பு போயிற்றி பர. நி. இ. 10 ஷை இல. ஷை இறை சின்னத்தம்பி ஆதிநாராயணன் பேரில்தோம்பு சிப்பித்தாவை தெ 10. ஷை இல ஷை இறை கதிரன் குளந்தைகாச்சியும் மறுபேருந்தோம்பு திருவணந்தோப்பு நி 9⅞ தெ ½. ஷை இல ஷை இறை கந்தர் பூதாத்தையும் வேலன் முதலிச்சியும் அம்பலவன் புண்ணியனும் மறுபேருந்தோம்பு இது அடங்கலும் கிணறும். எல்லைமுல்லை நி 30. 7352-ம் இலக்கத்தில் ஷை இறை பூதர் வேலாயுதனும் மறுபேருந்தோம்பு கிணறும். அமபுலியப்புலம் நி 29½. 7367- இலக்கத்தில் ஷை இறை விஞசி முதலிச்சியும் மறுபேரில்தோம்பு கிணறும் ஷைகாணி நி 26½. 5923-ம் இலக்கத்தில் ஷை இறை வைரவன் சிவகாமியும் மறுபேரிற்தோம்பு ஷை நி 40½. 790-ம் இலக்கத்தில் ஷை இறை அருளம்பலமுதலியாரில்தோம்பு கிணறும். எல்லைமுல்லை நி 30. மானிப்பாய் இறை எனது முதசொமானகாணி செல்லாத்தைவளவு நி 15. நவாலி இறை எனதுமுதசொயாட்சியானகாணி அங்குளானை தெ 12.

C. S. Arunachalam
Clerk. Culleden Estate
15th August)893. Neboda. Kalutura.

கஅகூச-ம் ௵ தைமீ கூ௨ யில் நொத்தாரிசு மண்டலாயகம் முகதாவில் ஏழாலைகுடி முருகர்மகள் அல்லது முருகேசபெண் சோதாத்தையாகிய என்பெயருக்கு நிறைவேறின சீதனஉறுதியையும் வேறு சில சாமான்களையும் சென்ற மாசிமீ ஏழாலைகுடி கந்தர் முருகேசு அபகரித்துச் சென்றதினால் அவ்வுறுதியிற் கண்ட காணிகளை அவராவது வேறெவராவது எவ்வகைச் சாசனமுஞ் செய்யப்படாதென்பதைச் சகலருக்கும் இத்தாலறிவிக்கிறேன்.

ஏழாலை
௨௦-அ-கூச.

இங்ஙனம்,
× சோதாத்தைகைக்கீறு.

பழையஓடு

வடதேசத்துப் பழய ஓடு ௫0,000, பழுதற்ற பழய பனைமரங்கள், பழய சலாகைகள் விலைக்கு இருக்கின்றன.

யாழ்ப்பாணம்
கெற்சிட்டங்கித்தெரு.

இங்ஙனம்,
சி. மாணிக்கம்.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்: சய௵ ஆவணிமீ அ௨.

கிரகங்களும் மனுஷரும்.

—:(o):—

(ரு-ம் புத்தகம். கூச-ம் பக்கத்தொடர்)

இனிச்சந்திரனுடைய பெயர்க்காரணங்களை ஆராய்வாம். சந்திரன் என்னும் பெயர் சந்தோஷிப்பிக்கிறவன் எனப் பொருள்தருவது. அஃதாவது சராசரங்களை யெல்லாம் மகிழ்விப்பவன் என்பது. சூரியனால் வெதும்பிய சராசரமெல்லாம் சந்திரோதயத்தால் குளிர்ந்து மகிழ்வனவாகும். சூரியாதினத்தில் ஒடுங்கிய சமுத்திரம் சந்திரனைக் கண்டமாத்திரத்தே குதூகலிக்கின்றது. அதுபற்றியே அதுசமுத்திரமெனப் பெயர்பெற்றது. வாயு பேதிக்கின்றது. மரங்கள் செடிகள் தளிர்க்கின்றன. சோகித்த மனம்புளகிக்கின்றது. போரிலே களைத்துச்சோர்ந்து விழ்ந்தவன் அக்களை தெளிந்து தானே எழுந்து நடக்கின்றான். இன்னோரன்ன ஏதுக்களால் சந்திரன்றானே உலகுக்கு மகிழ்ச்சிக்காரணனாகின்றானென்பது வெளிப்படை. இந்து என்னும் பெயர் குளிர்விப்பவன் என்னும் பொருள்தருவது. இதற்கு ஏதுக்கள் பிரத[்தியக்]ஷம். சுதாநிதியென்னும் பெயர் சராசரங்களுக்கு ரசத்தை அஃதாவது மதுவைக் கொடுப்பவன் என்னும் பொருள் தருவது. மரஞ்செடிகளுக்குப் பூவிலே தேனையும், விலங்குகளுக்கும் மனுஷருக்கும் ஜனனேந்திரியங்களிலே சுக்கில சோணிதங்களையும் விளைவிப்பவன் சந்திரனே யாதலின் அப்பெயர் புனையப்பெற்றான். அம்புஜன்மன் என்னும் பெயர் ஜலத்திலே பிறந்தவன் என்னும் பொருளது. அஃதாவது திருப்பாற்கடலிலே தேவர்கள் அமிர்தங்கடைந்தபோது பிறந்தவன் என்பது. இஃது ஓர் இரகசியார்த்தத்தை அடக்கிக் கூறிய பரிபாஷை. என்னையோவெனில், திருப்பாற்கடலைத் தேவர்கள் அமிர்தமெழும்படி கடைந்தார்களென்பது. தேவர்களாவார் வச்சிராயுதன் (Magnetic force personified) வாயுமுதலிய பூதசக்திகளும் வியாழன் முதலிய கிரகங்களின் ஆற்றல்களுமாம். இப்பூமி ஆதியில் உருக்கிய லோகநீர்போலத் தளதளவென்று உருகிநின்ற அவதரத்திலே திருப்பாற்கடலெனப் பெயர்பெற்றது. அது வாயுமுதலிய பூத சக்திகளாலும் காந்தசக்தியாதியாம் பிறவாலும் கடிகரவென்று சுழன்று தனது நாப்பணிலே தவறுதாடுவதாயிற்று. அங்ஙனமாடும்போது சுழல்வேகத்தால் அந்நீர்ப்பிண்டத்தில் ஒரு கூறு பின்னமாய்த் தெறித்தெழுந்து அந்தரஞ்சென்றது. அத்தெறித்தகூறே சந்திரனெனப் பெயர்பெற்றது. அன்றியும் இப்படிக் கடையப்பட்டபோது பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பூதங்கள் தம்மில் பஞ்சீகரண முறைப்படி கலப்புற்றன போக, எஞ்சிநின்ற பெரும்பாகமெல்லாம் அந்தரத்திலே பிரிந்து தனித்தனி மண்டலங்களாயின. அது பாலைக் காச்சித் தோய்த்துக் கடைந்தபோது அது நீர்வேறு வெண்ணெய்வேறு மோர்வேறாய் நின்றதுபோல நின்றதென்னல்வேண்டும். இக்காரணம்பற்றியே பூமிக்குப் பிருதிவியெனப் பெயர்வந்தது. பிருதிவி என்பதன் பொருள் வேறு[படுத்த]ப்பட்டது என்பது. போகங்களுக் கெல்லாம் இ[ருப்பிட]மாயுள்ள பூமியினிடத்துப் பிறந்த சந்திரனும் [த]னது மாதருவைப்போலவே போகங்களில் சீவகோடிகளுக்கு ஆசையை விளைவிப்பவனாயினான். அற்றேல் அமிர்தங்கடைந்தபோது அடுத்துக் கடைதற்கு உபகாரமாகநின்ற சந்திரன் யாதென்றாலோ, அது பிரகஸ்பதியண்டத்துச் சந்திரனாதல்வேண்டும். கடைந்தவர்கள் தேவர்களாதலால் தேவகுருவாகிய பிரகஸ்பதியினது அண்டத்துச் சந்திரனே தம்பமாயிற்றுபோலும். தம்பமென்றது நாப்பியகருஷணம் (Centrifugal Force.) இகனைக்குறித் தீண்டுவிரிப்பிற் பெருகும். அது நிற்க, சந்திரன் கிரகணப்படும்போது எந்த இராசிஸ்தானத்தில் நிற்கின்றானோ அந்த இராசியின் ஆதீனத்துட்பட்ட தேசங்களுக்கு நன்மை தீமைகளைச் சமயத்துக்கேற்பச் செய்தல் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றாமன்றோ. கடந்த பங்குனிமாசத்துக் கிரகணங்களின் பயனைக்குறித்து அக்கிரகணங்கள் சம்பவிக்குமுன்னரே, "சீனதேசத்தில்பஞ்சமும்யுத்தமும் உண்டாகும், அதுவும் பங்குனிமுதல் ஐந்தரை மாசங்களுக் குள்ளாகவுண்டாகும், சீனதேசத்திலும் வங்காளக் குடாவிலும் கொடும்புயலுண்டாகும்" எனச் செபாரியல்என்பவர் ஒருபத்திரிகையிலெழுதினர். அந்தப்படி நடப்பது இப்போது பிரத்தியக்ஷமன்றோ. "The Emperor of China will be in danger ......Violent storms will pass over that country and the Bay of Bangal will not be free from them......" இதனாலும் சந்திரனால் மனுஷர் நன்மை தீமைகளை அடைவதுண்மையென்பது விளங்குகின்றதன்றோ. வரும்.

ஆ. மு.

துக்கம் துக்கம்.

ஐயையோ, நம்மிந்துசமயிகளுட் பெருமைதங்கிய சிலர், "தன் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனக்கேடாக' வேண்டுமென்று எண்ணிச் சில அடாதகாரியங்களிற் றலையிட்டு நிற்றலைக் காண்பது பெரும்பரிதாபமும், வெட்கமும், துக்கமுமே. கந்தரோடையென்னுங் கிராமத்துப் பிரபுக்களெவருஞ் சேர்ந்து இனிமேல் எங்கள் பிள்ளைகளுக்குப் பாதிரிகளுடைய கல்வியும் வேண்டாம், நாகரிகமும் வேண்டாம், போதனையும் வேண்டாம் என்று வெறுத்துத்தள்ளித் தங்கள் பாலருக்கு வேண்டிய வித்தியாசாலையையும் ஸ்தாபித்து நடாத்திவருங்காலத்து, அவர்களுள் இரண்டொருவர், வெள்ளைப்பாதிரிகள் இதவார்த்தையிற் பின்னுமெடுபட்டுச் சற்றும் அபிமானபக்தியின்றியும், பின் விளையும் கேட்டைச் சிந்திக்காதும் அவர்க் குதவிசெய்யத் தலைப்பட்டது வியப்பினும்வியப்பே! நமது விரோதிகளாகிய பாதிரிகளுக்கு உதவிசெய்து அவர்களைக்கொண்டு நமதுசாதி, சமயம், தெய்வமாதியவைகளைத் தூஷிக்கச்செய்வது விவேகமாகுமா? அக்காலத்துத் தமிழரசர்கள் அரசிழந்த கதையையேனுங் கேள்விப்பட்டதில்லையா.

விவேகிகளே,

இனியாவது நம்சமயபரிபாலனத்துக் கேற்ற முயற்சிகளிற் றலையிட்டு விருத்திசெய்வதில் உங்கள் காலத்தைப் போக்கி நற்புகழைப் பெற்றுய்வீர்களாக.

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில்.

இங்குள்ள கந்தசுவாமிகோயிலில் தேரோடும் வீதியிலே உற்சவகாலத்திலே சில்லறை வியாபாரிகள் சிலவாடகங்கொடுத்துக் கடைவைத்து விற்பனவுசெய்வது வழக்கம். இந்த ஏழைக் கடைக்காரரிடத்துக் கோயிலெசமானர் வலாற்காரமாக ¾, 1, 1½ 2, 3, ரூபாவீதம் வரி வாங்கிப்போடுகிறாராம். இதனால் அவருக்கு ௫00, ௬00 ரூபா சேர்ந்துவிடுகிறதாம். ஏழைகள் வாடகங்கொடுக்க என்செய்வார்கள். எசமானருக்குக் கொடுக்க யார்தாலியை யறுப்பார்கள். எங்களரசினர் எங்களுக்குச் சுவாதீனத்தைத் தந்து எவராலும்இடுக்கணின்றி வாழுமாறு சட்டங்கள் செய்திருக்கவும், இந்த ஏழைச் சனங்கள் எசமானருக்கும் அவர்பின்வரும் துஷ்டர்களுக்கும் பயப்படவேண்டியதென்னை, வரிகொடுக்கமாட்டோமென்று மறுப்பின் அவர் செய்யக்கூடிய சிக்ஷைதானெதுவோ? இவர் சுயவரசு செய்யும் இராசாவா? கடி.

அரசினருதவிபெறும் வித்தியாசாலை.

இவ்வித்தியாசாலைகளிலனேகம், ஒருவர் ஸ்தாபித்துப் பின்னொருவரை மானேசராக நியமிக்க, அவை அவரால் நடாத்தப்பெற்று வருகின்றன. ஸ்தாபகருக்கும் மானேசருக்குமிடையே வேறு காரணமாக விரோதமெழுங் காலத்து அவ் வித்தியாசாலைக்கே கேட்டை வருவித்து விடுகின்றார்கள். இவர்கள் சுவாயநகருதாது பொதுசயங்கருதி ஸ்தாபித்து நடத்துபவர்களாயின் எக்குரோதமுண்டாயினும் வித்தியாசாலைக் கிடர்நினைக்கவே மாட்டார்கள். தற்காலத்துச் சிலமானேசர்களும் உபாத்தியாயர்களும் வேரை, கத்தரிக்காய் வியாபாரத்திலும் இது மிக இலகுவான வியாபாரமெனக்கண்டு வியாபாரஞ்செய்யத் தொடங்கிக் கொண்டார்கள். இதனால், ஸ்தாபகர்களுக்கும் மானேசர்களுக்கும் பங்கு விஷயத்திலும் பிறவிஷயங்களிலும் கலகமுண்டாகி இடமாற்றம் முதலியசெய்து, தத்தம் நிலங்களில் வித்தியாசாலைகளைக் கட்டிக்கொள்ள வழிதேடுகின்றார்கள். இதனாற் பெருங் கலகங்களும் இடையிடையே நேருகின்றன. இது விஷயத்தில் ஆங்காங்கிருக்கும் வித்தியாபரீக்ஷகர்களே கவனிக்கவேண்டியவர்களாவார்கள். அவர்களே நன்னிலைப்படுத்தக் கடமை பூண்டவர்களுமாக விருக்கின்றார்கள்.

சமாசாரம்.

காலநிலை—மழையில்லை. நோய்கள் மிகுதி.

எங்கள் ஏசண்டர்—இவர் கொழும்புக்கு (Durbar) டர்பார்க் கூட்டத்துக்காகச் சென்றனர்.

பெரியபுராணம்—வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் நடந்துவந்த இப்புராணபடனம் வருகிற திங்கட்கிழமை முடிவாகி, அற்றைத்தினமே திருவிளையாடற் புராணபடனந் தொடங்கப்படுமாம்.

ஸ்ரீ. தில்லையம்பலமுதலியார்—நவாலிவாசரும் கண்டி இஞ்சினீர்க் கந்தோர் இலிகிதருமாகிய இவர் இங்குவந்து சுற்றமித்திரரைத் தரிசித்து நேற்றைத்தினம் கோச்சுமார்க்கமாகக் கண்டிக்குத் திரும்பினர்.

நல்லூர்க்கந்தசுவாமிகோயில்:—இங்கே இப்பொழுது உற்சவம் நடக்கின்றது. அனேக அறிவிலிகள் சுவாமி வீதிவரும் நேரத்திலும் மேசை கதிரையிட்டு உட்கார்ந்தவாறே சுருட்டு வெற்றிலை வியாபாரஞ் செய்கின்றார்கள்.

தோணி அபாயம்:—சென்ற புதன்கிழமை விறகேற்றி மண்டைதீவுக்குச் சமீபத்தில் ஒற்றைப்பனையடி என்றவிடத்தில் வந்த வத்தையொன்று அப்பொழுது சற்றுரத்துவீசிய காற்றினாற்போலும் கவிழ, அதிலிருந்த ஒன்பதுபேர் கடல்வாய்ப்பட்டு மாண்டனர். சிலர் தாங்குகோல்பற்றிக் கரையேறினர். மாண்டோரில் எட்டுமாசச்சிசு க-ம், பெண்கள் மூவருமாம்.

உருமால்:—இங்கே அனேகர் சிலகாலங்களாக ஒருவிதமான தலைப்பாகையும் தொப்பியுமே யணிந்துவந்தார்கள். இப்பொழுது அவை நமது சாதிவழக்கத்துக் கேற்றதல்லவென்று நீக்கி, இந்தியாவினின்றும் கேட்டியாதும் சருகைவஸ்திரத்தினாலும் கட்டிய உருமால்களைவரவழைத்துப் பாவித்து வருவாராயினர். அதைக்கண்ட நிலஅளவுக்காரராகிய ஸ்ரீ. கல்லையாபிள்ளை, அதேமாதிரியான உருமால்கள்செய்து குறைந்த விலைக்குவிற்கின்றார். இவ்விதமாகவே நம்மவர்கள் எத்தொழிலிலும் கையிடுவார்களாயின் நம்மூர் செல்வத்தாலே மேலோங்குமே.

இரக்ஷணியசேனை:—இச்சேனை முன் இங்குவந்து பருத்திபடாப் பாடெல்லாம் பட்டும் எண்ணிவந்தகாரியம் சித்திக்காமையால் பின்வாங்கிவிட்டது. திரும்பவும் இப்பொழுது ஒருதரம் வந்து யாழ்ப்பாணத்தோடெதிர்க்க உத்தேசித்திருக்கிறதாம். முன் இச்சேனையை முரியடித்து வெற்றிபெற்ற கிறிஸ்துமதகண்டன சபையார் தூங்குவார்களா?

இலகுலேகம்:—தூத்துக்குடிச் சைவசமய கல்விச்சங்கத்தாரது கூ-ம், சு-ம் இலக்க இலகுலேகங்களும், கிறிஸ்துமதகண்டன சபையாரது ௩௪-ம் இலக்க இலகுலேகங்களும் வரப்பெற்றோம்.

ஸ்ரீ. க. சுவாமிநாதபிள்ளை:—மானிப்பாய் மருதடி விநாயகாலய மானேசராகிய ஸ்ரீ. சு. நவரத்தினபிள்ளையின் புத்திரராகிய சுவாமிநாதபிள்ளை, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு ௧,000 ரூபா நன்கொடையாக அளித்தனராம்.

—மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை ஆனி ௴ ௨௪௳ கொழும்புச் சைவபரிபாலன சபையாரால் மிகச்சிறப்பாக ஸ்ரீ. ச. தம்பையாமுதலியார் சத்திரத்திலே நடைபெற்றது. அன்று இரவு கொ. சை. ப. ச. பிரசாரகர் ஸ்ரீமத். செ. திவாகரசக்குருக்களவர்களால் மாணிக்கவாசகசுவாமிகள் திவ்ய சரித்திரப் பிரசங்கஞ் செய்யப்பட்டது. கடி.

லிகிதருத்தியோகம்:—திரிகோணமலைக் கச்சேரி முதலாம் லிகிதர் மெஸ். வேலி, யாழ்ப்பாணக்கச்சேரி ௨-ம் லிகிதராஞர், யாழ்ப்பாணப் பதிவுகத்தோரில் ஸ்ரீ. க. சின்னப்பா திரிகோணமலைக்கச்சேரித் துவிபாஷகராக, மட்டக்களப்புக்கச்சேரி ௩-ம் லிகிதர் ஸ்ரீ. இ. அருளம்பலம் அவரிடத்தையடைந்தனர்.

சென்னை ரிப்பன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்ட "பதிபசுபாசவாதம்," என்னும் புஸ்தகம் கூவர மகிழ்வுடனே பெற்றனம். இதில், ப்ரம்மவித்தியாவிலிருந் தெடுக்கப்பட்ட பலவிஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

செல்வப்பிள்ளைக்கள்வன்:—இத்திருடன் யாரென்பதை அனேகர் அறிந்திருப்பார்கள். இவன் சென்றமாசத்தில் ஒரு திருட்டு வழக்கில் அகப்பட்டு எட்டுமாசச் சிறையிருப்புக்கு விதிக்கப்பெற்றுச் சிலதினத்துள் இறந்து விட்டானாம்.

பெருஞ்சுறு:—கொழும்புக் கடற்கரையில் வயிற்றுள் ௰௬ குட்டிகளையுடைய ௰௦-அடிநீளச் சுறு ஒன்று இரையலவள்ளுண் டடைந்ததாம்.

சீனயாப்பானியயுத்தம்:—சிலதினங்கள் நடந்தயுத்தத்தில் யாப்பானியர் முன் ஜயமடைந்து, பின் அபஜயமடைந்தனர். ௨௦,000 சீனவீரர் உள்நாடடிற்புகுந்து ௨,000 யாப்பானியரைக் கொன்றார்கள். சீனரிலும், ௧,௫00 பேர் முன் மாண்டார்கள். கோரியாவரசன் யாப்பானியர் கையிற் சிறைப்பட்டான். யுத்தமுயற்சிக்காகச் சீனாவிலே பெருந்தொகைப்பணஞ் சேர்த்திருக்கிறார்களாம்.

பூகம்பம்:—ஐரோப்பாக் கண்டத்திலே இப்போது அடிக்கடி பூகம்பமுண்டாகிப் பெருநாசஞ்செய்துவருகின்றது.

இருசினேகிதர்:—பம்பாயிலே இருவர் அதி ஒற்றுமையுடைய நண்பர்களாயிருந்தார்கள். அவர்களுளொருவர் மற்றவர்மனைவியை அழைத்துக்கொண்டு றெயிலேறி அலகபாத்திலிறங்கி ஒரு சத்திரத்துக்குப் போனபொழுது, தனமனைவியும் மித்திரனும் இவர்களுக்கு முன்னமே சென்று அச்சத்திரத்திலிருக்கக்கண்டு வெள்கி ஒருவரையொருவர் மன்னிப்புக் கேட்டுச் சமா[illegible]ர்மனைவியருடன் வீடுசென்றனராம்.

பரீஸ்புத்தகசாலை:—இச்சாலையில் ௨௬ லட்சம் புத்தகங்களுளவாம்.

கோரியா:—இங்கே நடந்த சண்டையொன்றில் பிராஞ்சுப்பாதிரிகளிலனேகரும், கிறிஸ்தவர்களிலனேகரும் கொல்லப்பட்டார்கள்.

பிரக்கிராசிமார்பரீக்ஷை:—இதற்குப் பதினைந்துபேர் சென்றனர்.

கடிதம்.

A UNIVERSEL RELIGION.

ஸ்ரீ. விவேகானந்தசுவாமிகள், அமரிக்காவிற் சிக்காகோநகரத்திற் கூடிய சர்வசமயமகாசபையிற் செய்த பிரசங்கத்தினிறுதியிலுள்ள சிலபாகங்களை, இந்த௴ ௫ந்தேதியைக்கொண்ட ௧௪-ம் இலக்க உதயதாரகையில், மேற்கூறிய முகவுரையின்கீழ், பத்திராதிபர் எடுத்துக்காட்டி, அதில் ஒவ்வொரு மனிதனிலும் ஈசரகூறிருக்கின்றதென்று அவர் சொல்லியது, இந்துக்களுள் யாதொரு பகுப்பினரின் மதத்துக்கும் ஒத்ததாயிருக்கவில்லையென்றும், அது கிறிஸ்துமதக்கொள்கையோடொத்ததேயென்றும் வாதிப்பாராயினர். அவருடைய ஆட்சேபம் இந்துமதத்தையும் கிறிஸ்துமதத்தையும் ஆராய்ந்தறியாதவர்களுக்குச் சம்மதமாமேயன்றி, மற்றோர்க்குச் சம்மதமாகாது.

விவேகானந்தசுவாமிகள் சொல்லியது, இந்துமதமாகிய எங்கள் மதக் கொள்கையென்பதை நாம் பிரமாணத்தோடு காட்டுவாம். சிவஞானசித்தியார். ௨-ம் சூத்திரம் ௯-ம். செய்யுள் "உருவொடுகருவியெல்லாமுயிர்கொடுநின்றுவேறாய், வருவதுபோலவீசனுயிர்களின்மருவிவாழ்வன், தருமுயிரவனையாகா வுயிரவைதானுமாகான், வருமவனவைதானுயும்வேறுமாய்மன்னிநின்றே." தேவாரம். "என்னில்யாருமெனக்கினியாரில்லை, யென்னிலுமினியானொருவனுளன், னென்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக், கென்னுளேநிற்குமின்னம்பரீசனே". இன்னும் பிரமாணங்கள் பலவுளவாயினும் விரிக்கிற் பெருகுமென்றஞ்சி விடுத்தாம்.

மேலும், தாழ்ந்தசாதியார், ஈசுரக்கூறின் பெறுபேற்றையடையும்படி அவர்களுக்குதவிசெய்வோரைக் காணவுமில்லை, அவர்கள் வணங்குவதற்குக் கோயில்களுமில்லையென்று பத்திராதிபர் பரிதபிக்கின்றார். "வெள்ளாடு நனைகின்றதென்று வேங்கைப்புலி விழுந்தழுதாற்போல" அவர் பரிதபித்தல் நியாயமே! தாழ்ந்தசாதியாரெனப்பட்ட திருவள்ளுவநாயனார், நந்தனார் முதலியோரெவ்வாறு சிவானுக்கிரகம் பெற்றார்களென்பது பத்திராதிபருக்குப் புலப்படவில்லைப்போலும். தாழ்ந்தசாதியார் உயர்ந்தசாதியாரோடு கலந்து கோயில்களுக்குட் போவது விலக்கப்பட்டதாயினும், அவர்கள் உயர்ந்தசாதியாருடைய கோயில்களிற் பணங்கொடுத்துத் திருவுலா முதலியன செய்விப்பதும், சுவாமி உற்சவங்கொண்டருளும்பொழு[illegible]கள் வணங்குவதற்குத் தருணம் வாய்ப்பதும், [illegible]வர்கள் தங்கள்பாட்டிற் கோயில்கள் கட்டுவித்துப் பூசை திருவுலாமுதலியன செய்விப்பதும், பத்திராதிபருக்குத் தெரியாதா? அன்றியுஞ் சாதியாசாரமெல்லாங் கிரியாபாதத்தோர்க்கேயாம். ஞானபாதத்திலே உயர்ந்தசாதி தாழ்ந்தசாதியென்னு மேற்றக்குறைவில்லையென்பதைப் பத்திராதிபர் அறிந்துகொள்ளக்கடவர்.

இன்னும் எல்லாமனிதரிலும் ஈசுரக்கூறுளதென்பதையொத்துக்கொண்ட பத்திராதிபர், ஈசுரக்கூற்றின் வலிமையாலிறுதியில் எல்லாரும் நித்திய பேரின்பத்தை யனுபவிப்பதே சுருதி யுத்திக் கிசைந்ததாயிருக்க, கிறிஸ்துவில் விசுவசித்தோரன்றி ஏனையோர் நித்திய எரிவாய் நரகத்துக்கு இரையாவரென்னுங் கிறிஸ்துமதக்கொள்கைக்கு என்னபொருள் கொள்வார். ஈசுரக்கூறிருந்தாலுங் கிறிஸ்துவை நம்பாதவர்கள் நரகிடைப்படுவரெனில் அதனாலுண்டாகும் பிரயோசனம் யாது? கிறிஸ்து மதத்தை நம்பி நாம் நற்கதி பெறவேண்டுமென்று விரும்பும் பத்திராதிபர் கிறிஸ்துவை நம்பாமலும், கிறிஸ்துமதத்தை யறியாமலுமிறந்த எண்ணிறந்தோர் நற்கதியடைய என்ன உபாயங் கண்டுபிடித்திருக்கிறார். அவர்களை நித்திய நரகத்தில் விடுவது சர்வசீவ தயாபரராகிய கடவுளுக்கு நீதியன்றாம். அவர்கள் முத்தியடைய ஒரு வழியிருக்குமாயின் அது கிறிஸ்து மதத்தை யறியாமலிருக்கும் ஏனையோருக்கும் உபயோகப்படுமாதலின், தப்பிப்போன ஆடுகளை மீட்கிறதற்குச் செய்யுஞ் செலவைக் குறைக்கவும், தம் வாணாளைப் போதனைபண்ணுவதில் வீணாளாக்காமல் நன்முயற்சியிற் செலுத்தவும் பத்திராதிபரும் அவர் குழுவினரும் யோசிப்பதே இக்காலத்துக்குத் தக்கதாகும்.

கிறிஸ்துவை நம்பாதவர்கள் தப்பாது நித்திய நரகத்தில் வருந்துவரென்று சிலகாலத்துக்குமுன் போதித்த கிறிஸ்தவர், சாஸ்திர அறிவு தலைப்பட்டதினால் அது நீதி நியாயங்களுக்கு விரோதமென்பதையறிந்து, இப்போது சன்மார்க்கமுள்ள எந்தச் சமயத்தவனும் இரட்சிக்கப்படக் கூடுமென்று சொல்லத் தொடங்கிக்கொண்டார்கள் இதற்கு விவிலியநூற் பிரமாணமுண்டேற் கூறும்படி கேட்கிறேம்.

S, A

கந்தபுராணபடனம்.

கொழும்பு ஸ்ரீ. பொ. அருணாசலமவர்களும் மனைவியாரும் தங்கள் வீட்டில் ஸ்ரீ. ம. திருஞானசம்பந்தபிள்ளை உபாத்தியாயரவர்களைக்கொண்டு கந்தபுராணம் படிப்பிக்கத்தொடங்கி, ஆனி௴ ௧௬௳ யாகிய திங்கட்கிழமையிலன்று வள்ளியம்மை திருக்கல்யாணப்படலம் பொருள்சொல்லுவித்துக் கேட்டுமகிழ்ந்து படிப்பைமுற்றுவித்தார்கள். அன்று பிராமணர் சைவர்கட்கு ஆமதானமும் மற்றைச் சனங்கட்கு அன்னதானமுஞ் செய்தார்கள். திருக்கல்யாண மண்டபம், மகரதோரணங்களாலும் பூர்ண கும்பங்களாலும் பிறவற்றாலும் மிகச்சிறப்பாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அன்று ஸ்ரீ. கன்னித்தம்பிமுதலியாரவர்கள், சுப்பிரமணிய முதலியாரவர்கள் பிரதி அற்றேணிஜெனறல் பொ. இராமநாதரவர்கள், த. சண்முகம்பிள்ளையவர்கள், த. முத்துக்குமாரப்பிள்ளையவர்கள் முதலியோர் தங்கட்கள் மனைவிமைந்தராதியோரோடு வந்து படிப்புக் கேட்டுச் சந்தோஷமடைந்து போயினர். கடி.

சைவவித்தியாசாலை அத்தியாவசியகம்.

திரிகோணமலைத் தேசாபிமானிகளே!

இத்திரிகோணமலை தேவாரம்பெற்ற ஓர் மகா விசேட சிவஸ்தலமாயிருந்தும், சைவர்களாகிய நீங்களெல்லீரு மொருங்குசேர்ந்து இன்னுமோர் சைவவித்தியாசாலை தாபித்து நடாத்தாததென்னோ? யாழ்ப்பாணத்திலே இப்போதெத்தனையோ வித்தியாசாலைகள் புதிதாக ஸ்தாபனம் பெற்றுச் செவ்வே நடாத்தப்படுவதையும், அதனாற் பிள்ளைகளடையும் பெரும்பயனையும் நீங்களின்னு மறியீர்களா? வித்தியாசாலையாலாகும் வெகு நயங்களெல்லாவற்றையும், நீங்களெல்லீரும் நன்குணர்ந்திருந்தும், இன்னுமிவ்விஷயத்திலே கையிடாது சோர்வாயிருப்பது யாதுகாரணம் பற்றியோ? உங்களிடத்தே உள்ளபடி சைவாபிமானமுந், தேசாபிமானமுமிருந்தால், பொதுநன்மைபயக்கு மிவ்விஷயத்திலே இன்னுஞ் சோர்வாயிருப்பீர்களா? சைவசமயிகளென்ற நாமந்தாங்குவோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சமயநூற்கல்வியையன்றோ அத்தியாவசியங் கற்பித்தல்வேண்டும். சமயநூற்கல்வி அவர்களுக்குச் சிறுபிராயத்திலே ஊட்டப்பெறுதிருந்தால், அவர்கள் தமது கடவுளாகிய சிவபெருமானையும், அவருடைய இன்றியமையா இலக்கணங்களையும், சத்திபேதங்களையும், சத்திபேதசமாசங்களையும், ஆன்மாவையும், அதன் மலபந்தத்தையும், அது அறுதலையும், முத்தியையும், கிரயத்தையும் மற்றும் வேதாகமபுராண இதிகாசங்களையும் அறிந் துய்ந்தீடேறுவதெப்படி? உங்கள் பிள்ளைகளைச் சிறுபிராயத்திற்றானே இங்கிலீசுக்கல்வி கற்பதற்காகப் பாதிரிபள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகின்றீர்களே. "சிறுமையிற்கல்வி சிலையிலெழுத்து" என்றதுபோல அவர்களுக்குச் சிறுபிராயத்திலேயே கிறிஸ்து மதப்போதனைகளூட்டப்படுதலினாலும், ஓய்வுநாட் பள்ளிக்கூடத்திற்கு வலாத்காரமாய் அழைக்கப்பட்டுப் போதலினாலும், கிறிஸ்துமதத்திலே மச்சனம் பெற்றுப் போகாதிருப்பினும் அச்சார்பு பற்றிவிடுகின்றார்களே. அவர்களுக்கு அப்பள்ளிக்கூடத்திலே சைவசமயத்தின் மாட்சிமையையுங், கிறிஸ்துமதத்தின் தாழ்ச்சியையும் எடுத்துப் பேசிப்பவர் யார்? நீங்கள் உங்கள் பிதாமாதாக்களை உங்கள் சமூகத்திலே யாராவது வைவதைக் கேட்டுக்கொண்டு, மன மகிழ்ச்சியோடு யாதும்பேசாது மௌனிகளாயிருப்பீர்களா? இல்லையே! உங்கள் பெற்றோர்களை யாராவது இகழவெண்ணினும் மனந்தாங்காது பதைபதைக்கு முள்ளத்தையுடைய நீங்கள் உங்களுக்கும், எவர்களுக்கும், இம்மைக்கும், மறுமைக்கும் எக்காலத்தும் பரமபிதாவாயுள்ள சிவபிரானைப் பாதிரிகள் தங்கள் பள்ளிக்கூடங்களிலே உங்கள் பிள்ளைகளெதிரே தூஷிப்பதை யறிந்துகொண்டும், இன்னுமப்பள்ளிக்கூடங்களுக்கு லௌகிக கல்வியாகிய இங்கிலீசொன்றையுமே பெரும்பொருளாகவெண்ணி மனப்பூரணத்தோடு மனுப்புகின்றீர்களே ஆ! ஆ! உங்கள் சமயாபிமான மிருந்தபடியென்னை? ஆன்மார்த்தத்தைப் பயக்குமுங்கள் சமயநூற் கல்வியினுஞ் சீவனார்த்தமொன்றையே பயக்கும் ஆங்கிலேய கல்விமா விசேடமாய் முடிந்தது?. ஆன்மார்த்தத்தினும், சீவனார்த்தத்தையே விசேடமாகக் கொள்பவர்களுக்கு நாம் யாதைப்பேசியுமென். வஞ்சனோபாயமாயுள்ள அவர்கள் மாயவலையிலே உங்கள் சிறுவர்கள் போய்ச் சிக்கி மாய்ந்து கெடாது உய்ந்தீடேறுவதற்கு இனியாகுதலேற்ற எத்தனங்கள் செய்து சைவவித்தியாசாலை தாபித்து அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துங்கள். இதுநிற்க, புறதேசத்தவர்கள் யாராவது, இவ்வூருக்குத் தருமவிஷயமாக வந்தால், அவர்கள் மனங்குளிரும்படி உங்களாலியன்ற உதவிசெய்து அவர்களை மிக்கமரியாதையோடு மனுப்புகின்றீர்களே. புறவூரவர்கள் உங்களிடத்தேவந்து, வித்தியாசாலை ஸ்தாபிப்பதற்கென்றும், சிவாலய குகாலய விநாயகராலய கட்டடம் பிரதிட்டை செய்வதற்கென்றும், கன்னிகைகளைக் கரைசேர்ப்பதற்கென்றும் பெருந்தொகைப்பணஞ் சேர்த்து உங்களை மகா திரவியவான்களென்று மிகப் பாராட்டிப் புகழ்ந்துபோயிருக்கின்றார்களே. புறதேசத்தவர்களிடத்தே சென்ற தருமசிந்தைதானும், உங்கள் சுயதேசத்தவர்களிடத்தே செல்லாதது மிக்க ஆச்சரியத்தை விளைக்கின்றதே. வித்தியாசாலையொன்று ஈண்டவசியமென்பதனைச் சென்ற தசாண்டுகளாகச் சைவப்பிரசங்கங்களினும், சிவஞானப்பிரகாச புத்தகசாலையினும், இவ்வூரறிஞர்களும், சில யாழ்ப்பாணத்துக் கல்விமான்களும் வந்து பிரசங்கித்தும் இன்னும் இவ்வித்தியாதருமத்தி னூக்கங்கொள்ளாதது என்னையோ?

யாம் கூறுவதினால், எம்மேல் முனிவுகொண்டு யாதுங் குறைகூறற்க. நீங்கள் சிவாலய குகாலயங்களுக்கு, வீடு, விளைநிலம், தோட்டமாதியவற்றைத் தருமசாசனம் பண்ணுவதைச் சற்றே மட்டுப்படுத்தி இனியாவது அவற்றை வித்தியாசாலைக்கென்று விடுத்து உங்கள் இளைஞர்களுக்கு நல்லறிவூட்ட முயலுங்கள்.

இது நிற்க; நம்மூர்ப் போலிப்பிரபுக்களுள்ளே சிலர் பாதிரிமாரது இனியவார்த்தையிலே மயங்கி அவர்களது பள்ளிக்கூடக் கட்டடத்துக்காகப் பெரும்பொருளீந்து அவர்களைத் திருப்திப்படுத்தினார்கள். இவர்களது சமயாபிமான மிருந்தவாறென்னை? இவர்கள் இவ்விழிந்த செய்கையைச் செய்தும் வெட்கமுறாது தாங்களின்னுஞ் சைவர்கள் சைவர்களென்றுசொல்லி மிகுந்ததலையெடுப்போடு மிறுமாந்து திரிகின்றார்களே. இவர்களே தங்கள்மத சத்துருக்களுக்கு ஆயுதங்களைத் தீட்டிக்கொடுத்த அவற்றாற் சேதிக்கப்படுபவர்கள். இவர்களுக்கு நல்லறிவூட்ட யாவராலியலும். இனியாவது நம்மவர்கள் சைவவித்தியாசாலையினது விசேடத்தை நன்குணர்ந்து ஒன்று அதிசீக்கிரத்திலே ஸ்தாபிப்பதற்கு அவர்களுள்ளத்தை யுருகச்செய்து திருப்புமாறு தடங்கருணைப் பெருங்கடலாகிய கோணலிங்கேசரது திருவடிகளையே பிரார்த்தித்து இவ்விஷயத்தை இவ்வளவில் முடிக்கின்றேம். வித்தியாதானமே எவற்றுள்ளுஞ் சிறந்ததென்பதற்குப் பிரமாணம்.

"மாணவர்க்கறிவிளைவயக்கியின்பறு
மானமார்முத்தியில்வைக்குநீர்மையால்
தான்மெவ்வகையுளுந்தக்கவித்தியா
தானமேசிறந்ததுசாற்றுங்காலையே."

சுபமஸ்து   இங்ஙனம்,
தேசாபிமானி.

விளக்குவழக்கு.

குன்று, கூற்று, கந்து, பாகு, தூசு, கெஞ்சு, இலக்கு, என்பன குன்றம், கூற்றம், கந்தம், பாகம், தூசம், கெஞ்சம், இலக்கம் என வியவகாரப்படுதல் போல விளக்கு என்பதும் விளக்கம் என வழங்கப்பட்டுத் தீபம் என்னும் பொருளைச் செவ்வே உணர்த்துகின்றது. அங்ஙனமே பெருநாவலரும், சச்சியப்பமுனிவரும் "குடியென்னுங்குன்றாவிளக்கம்" 'தண்ணென்றெரிசுடர்விளக்கத்துச்சியிருந்திடுமீசன்" என்பனவற்றால் நன்கு விளக்கினர். அவ்வளவோ! அகத்தியர் வரத்தால் அவனியில்வந்து தவத்தான் மனந்தூயராய் மூக்குணங்கடந்து இறைவனருள் பெற்றவரும், திராவிட மகாபாடியகாரரும், ஆசிரியரும், தமிழ்வரம்பு நிலையிட்டவரும் ஆகிய சிவஞான யோகீசுவரரும், இலக்கணவிளக்கச்சூறாவளி என்புழி அவ்வுண்மையைத் துளக்கற விளக்கினர்!. வேறும் பலர்! இந்த உண்மைகளை எட்டுணையு நோக்காது ஸ்ரீ. சோமசுந்தரநாயகர் தாமியற்றிய ஞானசதுட்டயத்திலே ௩-ம் பக்கத்திலே "விளக்கம் என்பது விளக்கு என்னும் பொருள்பயவாது, விளக்கு என்பது தீபம்" என்பதும் பிறவும் வரைந்தனர். வரைந்ததைக் கொள்ளுவார் உள்ளந்தெளியும்படி மறுத்துரையாடினம். நாயகர் மறுக்கவிரும்புவாராயின்; பிரமாணங்களோடு மறுத்துரையாடுக.

அம்மட்டோ! மேற்படி சிவஞான யோகிகள் சிவஞானபோதச்சிற்றுரையில் "ஆளுடையபிள்ளையார் முதலாயினோர்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்தவாறென்னை யென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழியென வீண்டும் வலியுறுத்தார்" என எழுதிய அசல்லிய சாக்ஷிய சத்திய வாக்கியத்தை ௨௯-ம் பக்கத்திலே அநுவதித்து நிந்தித்தார். மேற்படி யோகீசுவரர் வாக்கும் மறுத்துரையாடற்பாலதோ? அது கையாதறிஞர் கைக்கொண்டுவக்கும் பொய்யா மொழியிலுறை பூரண வாக்கியமன்றோ! "அதில் அவரெழுதிய வாக்கியம் பூர்வநூல்கள் பலவற்றிற்கு விரோதப்பட்டோதுங்கலாதும்" என்றார். அது பூர்வநூல்களுள் எந்தெந்த நூல்களுக்கு விரோதப்படுகின்றன. ஒதுங்கவுந் தக்கதா! அவர்வாக்கைப் பிரமாணமாகக் கொள்ளாருமுண்டா? அவர் வாக்குகளில் ஆசங்கையும் நிகழுமா?

புன்னைமாநகர்.   பரமசாமிஐயர்.

